# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2330 - 2023 අප්‍රේල් මස 28 වැනි සිකුරාදා - 2023.04.28

*2330 ஆம் இலக்கம் – 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 602 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 610 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 603 | ஏல விற்பனைகள் | 611 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 607 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2023,ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, மே மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, மே மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

601 - B 082449 - 5,403 (2023/04)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

S11 DMUU திருத்த வேலைகளுக்கான பெறுகை- 05 எண்ணிக்கை.

பெறுகை இல.: SRS/ F. 7886

1. இலங்கைப் புகையிரத சேவைக்கு S11 DMUU திருத்த வேலைகளுக்காக உள்நாட்டு உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு, இலங்கை புகையிரத சேவைகள் சார்பில் திணைக்களக் கொள்வனவுக் குழு (மேஜர்) தவிசாளர், பெற்றுக்கொள்வார்.

2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் (NCB) விலைமனுச் செயற்பாடானது நடாத்தப்படும்.

3.கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து 2023.04.12 ஆந் திகதி முதல் 2023.05.15 ஆந் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),
புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078
அல்லது 94(11) 2436818
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின்னஞ்சல் : dgmp@ railways.gov.lk,
potl@railways.gov.lk
இணையத்தளம் : www.railway.gov.lk

4. விலைமனுதாரர் கனமான இரும்பு கட்டமைப்புகள் மற்றும் பயணிகள் வாகன உட்புற கட்டுமானங்களை மேற்கொள்ளும் இயலுமை மற்றும் கொள்வனவு உள்ளதென்பதற்கான ஆவண ரீதியான சாட்சியைத் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 32,000.00 ரூபாவை மட்டும் செலுத்துவதன் பேரில் 2023.04.12 ஆந் திகதி முதல் 2013.05.15 ஆந் திகதி வரை பி.ப. 3.00 மணி வரையில் இலங்கையில் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகம், பிரதிப் பொது முகாமையாளர் ( பெறுகைகள்) எனும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணைமுறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 1,800,000.00 ரூபா பெறுமதியுடைய நிபந்தனையற்ற உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.

7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023.05.09 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இரத்மலானை, பிரதம இயந்திரவியல் பொறியியலாளர் உப திணைக்களத்தில் இடம்பெறும்.

8. விலைமனுக்கள் 2023.05.16 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),
புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு (மேல் நிலை),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

04-284

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம்– களுவாஞ்சிக்குடி

### பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் அரசுடமையாக்கப்பட்டதுமான பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2023.05.13 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

J.B.A. றஞ்சித் குமார்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
களுவாஞ்சிக்குடி,
2023.03.31.

**ஏலவிற்பனை செய்யப்படும் சான்றுப் பொருட்களின் விபரம்**

| இல. | வழக்கிலக்கம் | வாகனப் பதிவு இல. | சான்றுப் பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 15202/F/15 | 47904 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 2 | 17597/16 | 69296587 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 3 | 19238/F/17 | 4409047 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 4 | 19239/F/17 | 6203131 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 5 | B/120/19 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 6 | B/121/19 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 7 | B/122/19 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 8 | B/123/19 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 9 | 25099/S/20 | 57189211 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 10 | 25123/F/20 | 69945977 | துவிச்சக்கர வண்டி | 01 |

| இல. | வழக்கிலக்கம் | வாகனப் பதிவு இல. | சான்றுப் பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 11 | 25158/F/20 | LB 626318 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 12 | 25159/F/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 13 | 25160/F/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 14 | 25161/F/20 | - | துவிச்சக்கர வண்டி | 01 |
| 15 | 25859/S/21 | 69777414 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 16 | MC/443/F/22 | 69913636 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 17 | AR/53/22 | 9664125 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 18 | AR/57/22 | 69282232 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 19 | AR/297/2` | - | துவிச்சக்கர வண்டி | 01 |
| 20 | AR/298/21 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 21 | 5434/Misc/12 | | சவள் | 02 |
| 22 | 10162/Misc/13 | | சவள் | 01 |
| 23 | 8579/Misc/13 | | சவள் | 01 |
| 24 | 12390/Misc/16 | | சவள் | 01 |
| 25 | 16893/Misc/18 | | சவள் | 01 |
| 26 | 19233/Misc/17 | | சவள் | 01 |
| 27 | 19692/Misc/17 | | சவள் | 01 |
| 28 | 19617/Misc/17 | | சவள் | 01 |
| 29 | 19988/Misc/17 | | சவள் | 01 |
| 30 | 20259/Misc/17 | | சவள் | 01 |
| 31 | 20652/Misc/17 | | சவள் | 01 |
| 32 | 21224/Misc/18 | | சவள் | 01 |
| 33 | 21542/Misc/18 | | சவள் | 01 |
| 34 | 2934/Misc/11 | | சவள் | 01 |
| 35 | 19233/Misc/17 | | மண்வெட்டி | 01 |
| 36 | 207864/Misc/18 | | மண்வெட்டி | 01 |
| 37 | 21267/Misc/18 | | மண்வெட்டி | 02 |
| 38 | 22131/Misc/18 | | மண்வெட்டி | 01 |
| 39 | 22232/Misc/18 | | மண்வெட்டி | 01 |
| 40 | 26026/Misc/21 | | வயல் மண் | 03 கியுப் |
| 41 | 27474/Misc/22 | | வயல் மண் | 02 கியுப் |

| இல. | வழக்கிலக்கம் | வாகனப் பதிவு இல. | சான்றுப் பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 42 | 27479/Misc/22 | | வயல் மண் | 02 1/2 கியுப் |
| 43 | Mc/126/Misc/22 | | வயல் மண் | 03 கியுப் |
| 44 | Mc/230/Misc/22 | | வயல் மண் | 03 கியுப் |
| 45 | Mc/231/Misc/22 | | வயல் மண் | 03 கியுப் |
| 46 | Mc/490 /Misc/22 | | வயல் மண் | 03 கியுப் |
| 47 | Mc/1397/Misc/23 | | வயல் மண் | 3/4 கியுப் |
| 48 | 27314/Misc/22 | | ஆற்று மண் | 03 கியுப் |
| 49 | 27339/Misc/22 | | ஆற்று மண் | 03 கியுப் |
| 50 | 27358/Misc/22 | | ஆற்று மண் | 03 கியுப் |
| 51 | 27376/Misc/22 | | ஆற்று மண் | 1/2 கியுப் |
| 52 | 27491/Misc/22 | | ஆற்று மண் | 3/4 கியுப் |
| 53 | MC/176/Misc/22 | | ஆற்று மண் | 02 கியுப் |
| 54 | MC/178/Misc/22 | | ஆற்று மண் | 02 கியுப் |
| 55 | MC/681/Misc/22 | | ஆற்று மண் | 3/4 கியுப் |
| 56 | MC/1040/Misc/22 | | ஆற்று மண் | 03 கியுப் |

*04- 280*

---

### மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்- சாவகச்சேரி

### சான்றுப் பொருட்களின் ஏல விற்பனை

பறிமுதல் செய்யப்பட்டதும், உரிமை கோரப்படாததுமான கீழ்க்காணும் பொருட்கள் 2023.05.13 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு சாவகச்சேரி நீதிமன்றக் கட்டிடத் தொகுதியினுள் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

01. குறிப்பிட்ட ஏதாவது பொருட்கள் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் இருப்பின் ஏலவிற்பனைக்கு குறிப்பிட்ட தினத்தில் ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

02. பதிவாளரின் முன் அனுமதிபெற்று ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு முன்னர் ஏலவிற்பனைக்கென குறிப்பிட்ட பொருட்களைப் பார்வையிடலாம்.

03. நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் தகுந்த தொகையானது விற்பனையின் போது ஏற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் மன்றின் விருப்புரிமையின் பிரகாரம் அப்பொருட்களை ஏல விற்பனையில் இருந்து நீக்கிவிடுவதற்கான உரித்தை மன்று கொண்டுள்ளது.

04. ஏல விற்பனையின் போது ஏலத்தில் வாங்கப்பட்ட பொருட்கள் உடனடியாகப் பணம் செலுத்தப்பட்டு நீதிமன்ற வளாகத்தில் இருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. பொருட்கள் ஏலத்தில் கோருபவர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையை கொண்டு வருதல் அவசியமானதாகும்.

A. ஜுட்சன்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
சாவகச்சேரி.

**சான்றுப் பொருட்களின் விபரம்**

| *No.* | *Case No.* | *Vehicle No.* | *Type of Vehicle* |
|---|---|---|---|
| 1 | 19283 | NP HT 8021 | மோட்டார் சைக்கிள் |
| 2 | 21336 | NP XE 1097 | மோட்டார் சைக்கிள் |
| 3 | 19478 | 500-1132 | மோட்டார் சைக்கிள் |
| 4 | 20075 | NP VD 3728 | மோட்டார் சைக்கிள் |
| 5 | 17860 | NP JP 7877 | மோட்டார் சைக்கிள் |
| 6 | 21331 | NP WH 1889 | மோட்டார் சைக்கிள் |
| 7 | 24274 | NP WL 7497 | மோட்டார் சைக்கிள் |
| 8 | 17429 | NP HY 7850 | மோட்டார் சைக்கிள் |
| 9 | 20025 | NP VW 1756 | மோட்டார் சைக்கிள் |
| 10 | 21165 | NP GQ 8671 | மோட்டார் சைக்கிள் |
| 11 | 23635 | 501-0197 | மோட்டார் சைக்கிள் |
| 12 | 21258 | NC MM 5070 | மோட்டார் சைக்கிள் |
| 13 | 19743 | NP YQ 0324 | முச்சக்கர வண்டி |
| 14 | 19020 | NC UH 1019 | மோட்டார் சைக்கிள் |
| 15 | 18505 | NP GS 4089 | மோட்டார் சைக்கிள் |
| 16 | 18500 | NP GP 6862 | மோட்டார் சைக்கிள் |
| 17 | 15505 | NW JA 8682 | மோட்டார் சைக்கிள் |
| 18 | AR/52/20 | NP BAK 4393 | மோட்டார் சைக்கிள் |
| 19 | 23711 | | உழவியந்திரப் பெட்டி |
| 20 | AR/32/16 | NP GR 9101 | மோட்டார் சைக்கிள் |
| 21 | AR/11/16 | NP JD 5905 | மோட்டார் சைக்கிள் |
| 22 | AR/44/20 | NP WX 0662 | மோட்டார் சைக்கிள் |
| 23 | 7628 | GL 8985 | மோட்டார் சைக்கிள் |
| 24 | 21936 | 42 - 3924 | மோட்டார் சைக்கிள் |

| No. | Case No. | Vehicle No. | Type of Vehicle |
|---|---|---|---|
| 25 | 26831 | NP PS 0111 | ஹப் வாகனம் (Bolero) |
| 26 | 24804 | 59 - 1602 | ஹயஸ் வான் (Hiace Van) |
| 27 | 23707 | NW QB 1045 | முச்சக்கர வண்டி |
| 28 | 22696 | 48 - 5825 | லொறி வாகனம் |

04- 304

---

# ஆய விற்பனையும் குத்தகையும்

**கல்பிட்டி பிரதேச செயலகப் பிரிவு**

*கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை 2023 – 2024*

*2023 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் 2024, யூன் மாதம் வரை*

2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2024 யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள 12 மாத காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1982, ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்த ஒரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமப் படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக கல்பிட்டி பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை முறையாக முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "................... ஆம் இலக்க ............. கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்படல் வேண்டும். 2023.05.11 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் கல்பிட்டி பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2023.05.11 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் இச் செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை மீண்டும் 2023.06.12 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறும்.

6. இது தொடர்பான மேலதிக விபரங்களை கல்பிட்டி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சதுரக ஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
கல்பிட்டி.

பிரதேச செயலகம்,
கல்பிட்டி,
2023, ஏப்பிறல்.

**அட்டவணை**

| இல. | பிரிவு | எல்லை | தவறணை | கேள்விப் பத்திர முடிவுத் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|
| 1. | கல்பிட்டி | தளுவை | கள்ளு | 2023.05.11 மு.ப.10.30 | 1,000.0 |
| 2. | கல்பிட்டி | ஏத்தாளை | கள்ளு | 2023.05.11 மு.ப.10.30 | 1,000.0 |

04- 285

---

**நாத்தாண்டிய பிரதேச செயலகப் பிரிவு**
**கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை**

**2023 யூலை மாதம் முதல் 2024 யூன் மாதம் வரை**

2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள கள்ளுத்தவறணைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாகக் கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் பொது நிபந்தனையாகும். 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் கள்ளுத்தவறணைகள் குத்தகை இடும் நிபந்தனைகளுக்கு அமைவானதாகும்.

3. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிக்கப்படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப்பணமாக நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் முறையாக பொதியிடப்பட்டு கடித உறையிலிட்டு இடது பக்கத்தில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு “ 01 மூதுகடுவ கள்ளுத்தவறணை ” அல்லது “ 02 கடுநேரிய கள்ளுத்தவறணை” எனக் குறிப்பிடப்பட்டு 2023.05.22ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பு நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் மேற்குறிப்பிடப்பட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாய் “பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், நாத்தாண்டிய” என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

6. 2023.06.22 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்த நேரம் மனுதாரர் அனைவரும் இச் செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

7. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதும் இருப்பின், அவற்றுக்கான மீள் விற்பனை - ஆந் திகதி காலை - மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நடைபெறும்.

இது தொடர்பாக மேலதிக விபரங்கள் நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

சதுரக ஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
நாத்தாண்டிய.

பிரதேச செயலகம்,
நாத்தாண்டிய,
2023.04.03.

**அட்டவணை**

| இல. | வலயம் | கிராமம் | குத்தகை விற்பனை தொகை |
|---|---|---|---|
| 1. | நாத்தாண்டிய | மூதுகடுவ | ரூ.1,000.00 |
| 2. | நாத்தாண்டிய | கட்டுனேரிய | ரூ.1,000.00 |

04-286

---

## முந்தல் பிரதேச செயலாளர் பிரிவு

கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை -2023/2024

2023, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2024, யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியினுள் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளாவாறான கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் மற்றும் சகல கலால் அனுமதிப்பத்திரங்களுக்கமைவான நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையிலும் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான குத்தகை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. முந்தல் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய விண்ணப்பப்படிவங்களில் கேள்விகளை சமர்ப்பிக்கப்படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத் தொகைப் பணத்தை முந்தல் பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் 15 % பெறுமதியான ஆதன பெறுமதிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை முறையாக முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் கள்ளுத் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு ".............................. இலக்கமுள்ள ........................ கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்படல் வேண்டும். கள்ளுத்தவறணைக்கான கேள்விப்பத்திரங்கள் 2023.06.06 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக முந்தல் பிரதேச செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் முந்தல் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2023.06.06 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் முந்தல் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. முன்னர் குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய முடியாது போன கள்ளுத் தவறணைகள் 2023.07.04 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அத்தினத்திற்கு கேள்விப்பத்திரங்கள் முன்வைத்தல் முன்னர் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க நடைபெறும்.

7. இது தொடர்பான மேலதிக விபரங்களை முந்தல் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 032- 2052271.

எம்.எஸ்.பீ.டபிள்யூ. டீ.எம். எஸ். பீ. மல்வில,
உதவிப் பிரதேச செயலாளர்,
முந்தல்.

பிரதேச செயலகம்,
முந்தல்,
2023. 04.19.

அட்டவணை

| தொ. இல. | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|---|
| 1. | முந்தல் | முந்தல் | மு.ப. 11.00 மணி பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2023.06.06 | ரூ.1,000.00 |
| 2. | முந்தல் | மதுரங்குளி | மு.ப. 11.00 மணி பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2023.06.06 | ரூ.1,000.00 |
| 3. | முந்தல் | முக்கு தொடுவாவ | மு.ப. 11.00 மணி பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2023.06.06 | ரூ.1,000.00 |
| 4. | முந்தல் | உடப்பு | மு.ப. 11.00 மணி பி.ப.5.00 | பி.ப.2.00 மணி இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2023.06.06 | ரூ.1,000.00 |

04- 335

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## ஒன்றிணைப்பு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தூர்யா ( பிறைவட்) லிமிடட் மற்றும் தூர்யா ரிசோட்ஸ் (பிறைவட்) லிமிடட் ஆகிய நிறுவனங்களை ஒன்றிணைத்தல்

தூர்யா (பிறைவட்) லிமிடட்( கம்பனி பதிவிலக்கம் பீவீ 6690) எனும் நிறுவனத்தை தூர்யா ரிசோர்ட்ஸ் (பிறைவட்) லிமிடட் ( கம்பனி பதிவிலக்கம் பீவீ 71418) நிறுவனத்துடன் ஒன்றிணைக்கும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதோடு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1)(அ) பிரிவின் நியதிகளின் கீழ் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் அதற்குரிய ஒன்றிணைப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(2) ஆம் பிரிவுக்கு ஏற்ப 2023, ஏப்பிறல் 01 ஆந் திகதியிலிருந்து இவ்வொன்றிணைப்பு அமுலுக்கு வருகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட ஒன்றிணையும் கம்பனிகள் 2023, ஏப்பிறல் 01 ஆந் திகதியில் இருந்து தூர்யா ( பிறைவட்) லிமிடட் என தொடரும்.

தூர்யா (பிறைவட்) லிமிடட்,
பணிப்பாளர்.

04-299

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அம்பாறை மாவட்ட நிந்தவூர் பற்று 12 ஆம் குறிச்சி 1 ஆம் குறுக்குத் தெரு, 76 எனும் முகவரியில் வசிக்கும் அப்துல் அஸிஸ் முஹம்மட் பாயிஸ் (தே.அ.அ.இல. 861322343V) ஆகிய நான், எனது தாயான மீராலெவ்வை சித்தி ஹபீபா தே.அ.அ. இல. 6556963715V ஆகியவருடன் சேர்ந்த நிந்தவூர் -12, வன்னியார் வீதி, இல. 206A ஐச் சேர்ந்த அப்துல் கபூர் முஹம்மட் சுஹூட் (தே.அ.அ. இல. 572952568V) என்பவர் பெயரில் பிரிசித்த நொத்தாரிசு A.I. நசீல் அவர்கள் முன்பு எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.03.12 ஆந் திகதியில் 1123 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்டதும் பதிவாளர் நாயகத்தின் மட்டக்களப்பு பதிவாளர் நாயக

அலுவலகத்தில் 2018.03.21 ஆந் திகதி தொடரிலக்கம் 155 இல் 15 ஆம் இதழில் 26 ஆம் இலக்கப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட விசேட அற்றோணித்தத்துவம் 2022.03.10 ஆந் திகதி முதல் மீளப்பெறுவதோடு இன்று முதல் மேற்குறித்த அற்றோணித்தத்துவப்பத்திரத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

அப்துல் அஸிஸ் முஹம்மட் பாயிஸ்.

04-296

---

## ஏல விற்பனைகள்

### டீ.எப்.சீ. சீ. வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

அடமானம் வைத்தோர் என்ற வகையில் பண்டாரவளையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கெனத் ஹொட்வின் டீ சில்வா என்பவரினால் 2018.08.30 ஆந் திகதியிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட அடமானப் பத்திர இல. 2794 ஐத் திரும்பச் செலுத்தத் தவறியதற்காக பண்டாரவளையைச் சேர்ந்த திரு. அபேவிக்ரமஹே இசங்க உமயன்க மற்றும் திருமதி அத்தநாயக்க முதியான்சேலாஹே அமித அத்தநாயக்க என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக டீ.எப்.சீ.சீ. வங்கி பீஎல்சீயில் ஈடு வைக்கப்பட்ட சொத்து.

ஊவா மாகாணம்,பதுளை மாவட்டம், மெடிகிந்த மஹாபலாத்த கோரளவில் ஹப்புதல பிரதேச செயலாளர் பிரிவு ஹப்புத்தல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட எரன்வெல கிராம அலுவலர் பிரிவில் கஹடவெல கிராமத்தில் அமைந்துள்ள ''ஹென குருஹெல்ல மற்றும் ஹின்குருகெல பட்டன'' என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் டீ. சுதத் அருண ரன்ஞன என்பவரினால் 2018, யூலை 03 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 3172 இல் துண்டு A அங்கு காணப்படுகின்ற கட்டடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டு பதினைந்து பேர்ச் (0ஏ.0றூ.15பே.) அல்லது 0.0380 ஹெக்டயார் விஸ்தீரணத்தை துண்டு A கொண்டுள்ளது.

அத்துடன் வீதி விதிமுறைகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

01. ஊவா மாகாணம்,பதுளை மாவட்டத்தில், மெடிகிந்த மஹாபலாத்த கோரளவில் ஹப்புதல பிரதேச செயலாளர் பிரிவு ஹப்புத்தல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட எரன்வெல கிராம அலுவலர் பிரிவில் கஹடவெல கிராமத்தில் அமைந்துள்ள ''ஹென குருஹெல்ல மற்றும் ஹின்குருகெல பட்டன'' என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் என்.எஸ்.எல்.பெர்னாண்டோ என்பவரினால் 1969.07.29 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 922 இல் துண்டு இல. 25 இல் சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டு முப்பத்தொன்பது தசம் ஒரு பேர்ச் (0ஏ.0றூ.39.1பே.) விஸ்தீரணத்தை துண்டு 25 கொண்டுள்ளதுடன் பதுளை காணிப் பதிவு அலுவலகத்தில் பதியப்பட்டுள்ளது.

02. ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில், மெடிகிந்த மஹாபலாத்த கோரளவில் ஹப்புதல பிரதேச செயலாளர் பிரிவு ஹப்புத்தல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட எரன்வெல கிராம அலுவலர் பிரிவில் கஹடவெல கிராமத்தில் அமைந்துள்ள ''ஹென குருஹெல்ல மற்றும் ஹின்குருகெல பட்டன'' என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் என்.எஸ். எல். பெர்னாண்டோ என்பவரினால் 1969.07.29 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 922 இல் துண்டு இல. 26 இல் சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டு ஒரு றூட் பத்து பேர்ச் (0ஏ.01றூ.10பே.) விஸ்தீரணத்தை துண்டு 25 கொண்டுள்ளதுடன் பதுளை காணிப் பதிவு அலுவலகத்தில் பதியப்பட்டுள்ளது.

03. ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில், மெடிகிந்த மஹாபலாத்த கோரளவில் ஹப்புதல பிரதேச செயலாளர் பிரிவு ஹப்புத்தல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட எரன்வெல கிராம அலுவலர் பிரிவில் கஹடவெல கிராமத்தில் அமைந்துள்ள ''ஹென குருஹெல்ல மற்றும் ஹின்குருகெல பட்டன'' என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் என்.எஸ்.எல்.பெர்னாண்டோ என்பவரினால் 1969.07.29 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 922 இல் துண்டு இல. 27 இல் சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டு இரண்டு தசம் ஆறு பேர்ச் (0ஏ.0றூ.2.6பே.) விஸ்தீரணத்தை துண்டு 27 கொண்டுள்ளதுடன் பதுளை காணிப் பதிவு அலுவலகத்தில் பதியப்பட்டுள்ளது.

**மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2023, மே 31ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.**

**காணியைச் சென்றடைகின்ற விதம்**- பண்டாரவளை நகரத்திலிருந்து வெலிமட வீதி மார்க்கமாக சுமார் 1.2 கி.மீ. தூரம் உள்ள சென்.தோமஸ் சந்தி வரை சென்று இடது பக்கமாகத் திரும்பி தொடர்ந்து 10 மீ. சென்று வலது பக்கத்திலுள்ள சமஹி மாவத்தையால் 200 மீ. தூரம் சென்று 2 ஆம் ஒழுங்கையால் திரும்பி 60 மீ. சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வீதியின் வலது பக்கத்தில் வீதியின் முன் அமைந்திருக்கும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.****-2023.02.03 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2023.01.02ஆந் திகதிய " டெய்லி திவயின", "த ஐலன்ட்" மற்றும் 2022.12.29 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகையையும் பார்க்கவும்.*

**கட்டணம் செலுத்தும் விதம்.**- வெற்றிகரமான கொள்வன வாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் பத்து வீதம் 10% ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி ஒரு வீதம் (1%) ;

(3) ஏல விற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%);

(4) விற்பனை நிபந்தனைகளுக்கான உறுதிப்படுத்தல் கட்டணம் 3,000.00 ரூபா;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 2,000.00 ரூபா;

(6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு.

கொள்வனவு விலையின் மிகுதி 90 % மற்றும் இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட சட்டபூர்வ கட்டணங்கள், கடமைகள், வரிகள் அல்லது கட்டணங்கள் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன்பு வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

மேலும் விபரங்களுக்கு தயவு செய்து மறுவாழ்வு மீட்பு துறையுடன் தொடர்பு கொள்ளவும். "டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ, இல.73, டபிள்யூ. ஏ.டீ. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 2" எனும் விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011- 2371371.

"மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறி வித்தலின்றி இரத்துச் செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்."

துசித கருணாரத்ன (ச. நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ,
தொலைபேசி இல. : 011-3068185, 011- 2572940

04-291

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

ஜெஃப்னா சோல்ட் ( பிறைவெற்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0120 1000 2409

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2022.06.30ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.03.17ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும்* (Gazette) *2023.03.14ஆந் திகதிய "திவயின"* (Divaina), *"ஐலண்ட்"* (Island), *"தினக்குரல்"* (Thinakkural) *ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான அறுபது இலட்சத்து எழுபத்தேழாயிரத்து எழுநூற்று நாற்பத்தேழு ரூபா பதினான்கு சதம் (ரூபா 60,77,747.14) 2022, மே 19 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பத்தேழு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து எழுநூற்று ஐம்பது ரூபா (ரூபா 57,77,750.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினான்கு வீதம் (14 %) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 6353 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ, சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.06.09 ஆந் திகதி மு.ப.11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.*

***அட்டவணை***

*கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், கோரளைப் பத்து பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் மட்டக்களப்பு பிரதேச செயலாளர் பிரிவின் ரேதள கிராம அலுவலர் பிரிவின் கோரளைப் பத்துவின் கல்குடா கிராமத்தில் அமைந்த "பட்டியடி சேனி கொகணட் எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. கதாதரன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2018, திசெம்பர் 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 2018/1800 ஆம் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: எம். கே. எம். மிக்ஷாத் என்பவர் உரிமை கோரும் தோட்டம் (உத்தரவு பெற்ற நில அளவையாளர் வீ. ராஜேந்ரன் என்பவரால் தயாரிக்கப்பட்ட இல.* R/ *33/ 2014 ஆம் வரைபடத்தில்*

காட்டப்பட்ட லொட் 6; கிழக்கு: சுபேந்திர குமார் என்பவர் உரிமை கோறும் தோட்டத்தை பிரிக்கும் மதில் மற்றும் கம்பி வேலி; தெற்கு: வாழைச்சேனை மற்றும் பாசிகுடா வரையான வீதி மற்றும் மேற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. கதாதரன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2018, நவெம்பர் 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 2018/1700 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 1, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் முப்பத்தி ஒன்று தசம் மூன்று ஒன்பது பேர்ச் (01ஏ. 00றூ. 31.39பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2018/ 1800 ஆம் வரைபடத்திற்கு அமைவாக மட்டக்களப்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் Q 0034/78 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது அண்மைய நில அளவீட்டு வரைபடத்திற்கு அமைவாக கீழ்க் கண்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது:

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், கோரலாய்பத்து (வாழைச்சேனை) பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் கோரலாய்பத்து (வாழைச்சேனை) பிரதேச செயலாளர் பிரிவின் 204 - கல்குடா கிராம அலுவலர் பிரிவின் கோரலாய் பத்துவின் கல்குடா கிராமத்தில் பிரதான வீதி பாசிகுடாவில் அமைந்த "பட்டியடி சேனி கொகணட் எஸ்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. கதாதரன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2019, மே 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 1905A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: எம். கே. எம். மிக்ஷாத் என்பவர் உரிமம் கோரும் தோட்டம் (உத்தரவுபெற்ற நில அளவையாளர் வீ. ராஜேந்ரன் என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. R/ 33/ 2014 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 6) ; கிழக்கு: தற்போது சுபேந்திர குமார் என்பவர் உரிமை கோரும் தோட்டம்; தெற்கு: பாசிகுடா பிரதான வீதி (R. D. A) வீதி ; மற்றும் மேற்கு: இதே காணியின் எஞ்சிய பகுதி இல. 2018/ 1700 ஆம் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் முப்பத்தி ஒன்று தசம் மூன்று ஒன்பது பேர்ச் (01ஏ. 00றூ. 31.39பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1905A எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

04-327

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

எஸ். ரீ.என். ஸ்ட்டார் புரொபர்ட்டி டெவளப்பார்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0120 1000 1313

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.12.30ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.03.17ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.03.14ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பன்னிரெண்டு கோடியே எழுபத்தி இரண்டு இலட்சத்து அறுபதாயிரத்து நூற்று எண்பத்தி ஏழு ரூபா எண்பத்தி எட்டு சதம் (ரூபா 127,260,187.88) 2019, நவெம்பர் 28ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை பன்னிரெண்டு கோடி ரூபா (ரூபா 120,000,000.00) கட்டணத்திற்காக வருடாந்தம் at the rate of Average Weighted Prime Lending Rate + நூற்றுக்கு மூன்று வீதம் (3%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 85 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா என்பவர்கள் மூலமாக 2023.06.13 ஆந் திகதி மு.ப.10.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மா நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவின் பம்பலப்பிட்டி கிராம அலுவலர் பிரிவின் மிலாகிரிய வோட் இல. 39 பம்பலப்பிட்டி மெக்ளியோட் வீதியில் அமைந்த மெக்கியோட் வீதி வரிமதிப்பீட்டு இல. 37 ஐ ஏற்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். விக்ரமசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2017, ஏப்பிறல் 19 ஆந் திகதியிடப்பட்ட இல. 14748 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் X என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: நந்தன கார்டன்ஸ் வரிமதிப்பீட்டு இல. 64 ஐ ஏற்ற வளவுகள்; கிழக்கு: நகர சபை வடிகால்; தெற்கு: மெக்களியோட் வீதி ; மற்றும் மேற்கு: மெக்ளியோட் வீதி வரிமதிப்பீட்டு இல. 33 ஐ ஏற்ற வளவுகள் ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது தசம் நான்கு சைபர் பேர்ச் (00ஏ. 00றூ. 20.40பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன்

அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 14748 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் X உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. எல். பீரிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1975, நவெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 2779 எனும் வரைபடத்தின் மீள் அளவீடாகும். இது மற்றுமொரு விதத்தில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. அத்துருலிய என்பவரால் தயாரிக்கப்பட்ட 1959, ஓகத்து 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 1124 எனும் வரைபடத்தின் லொட்கள் E1, E2, E3 என்பவற்றின் ஒன்றிணைப்பாகும். இது மற்றுமொரு விதத்தில் கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மேற் கூறப்பட்ட பம்பலப்பிட்டி மெக்ளியோட் வீதியில் அமைந்த மெக்ளியோட் வீதி வரிமதிப்பீட்டு இல. 37 ஐ ஏற்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. எல். மார்ட்டென்ஸ்ட்டின் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1950, ஏப்பிறல் 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 143 எனும் வரைபடத்தில் லொட்கள் E1 மற்றும் E2 உள்ளடக்கப்பட்ட காணி மற்றும் என். டீ. சிறிசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1958, திசெம்பர் 22ஆந் திகதியிடப்பட்ட இல. 39 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் E3B என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: நந்தன கார்டன்ஸ் வரிமதிப்பீட்டு இல. 64 ஐ ஏற்ற வளவுகள் மற்றும் லொட் E4; கிழக்கு: நகர சபை வடிகால் மற்றும் லெயார்ட்ஸ் வீதி வரிமதிப்பீட்டு இல. G22 ஐ ஏற்ற வளவுகள்; தெற்கு: மெக்களியோட் வீதி மற்றும் மேற்கு: லொட் E3A மற்றும் மெக்ளியோட் வீதி வரிமதிப்பீட்டு இல. 31 ஐ ஏற்ற வளவுகள், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது தசம் நான்கு சைபர் பேர்ச் (00ஏ. 00றூ. 20.40பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் ஹோமாகமை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் E 112/ 122 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

04-329

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

தேவ் டிரக்டார்ஸ் அன்ட் கம்பைன்ஸ் ( பிறைவெற்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0016 1000 6090

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.01.26ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.03.17ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.03.17ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), பத்திரிகைகளிலும் மற்றும் 2023.03.17 ஆந் திகதிய "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான முப்பத்தி ஐந்து கோடியே ஐம்பது இலட்சத்து ஐம்பத்தி ஒன்பதினாயிரத்து தொண்ணூற்றி ஐந்து ரூபா ஐம்பத்தி ஆறு சதம் (ரூபா 355,059,095.56) 2023, சனவரி 19 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை பதினெட்டு கோடியே தொண்ணூற்றி எட்டு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 189,812,500.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினொரு வீதம் (11%) மேலும் பதின் மூன்று கோடியே பதினொரு இலட்சத்து எண்பதாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தி ஐந்து ரூபா அறுபத்தி ஏழு சதம் (ரூபா 131,180,955.67) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஆறு தசம் ஒன்பது மூன்று வீதம் (6.93%) வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 1051, 2407 மற்றும் 2433 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.05.25 ஆந் திகதி பி.ப.2.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே மெத பத்துவின் கம்பஹா மாநகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குள் வெறல்லவத்த கிராமஅலுவலர் பிரிவின் யக்கல கிராமத்தில் அமைந்த கொழும்பு வீதி, வரிமதிப்பீட்டு இல. 194/8 ஐ ஏற்ற "வெரல்லவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் யூ. எம். ஆரியசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, மே 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 2147 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: அரச காணி; கிழக்கு: வீதி; தெற்கு: இங்கு லொட் 2 மற்றும் 3 மற்றும் மேற்கு: அரச காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் நான்கு ஏக்கர்கள் மற்றும் பதின் மூன்று தசம் ஆறு பேர்ச் (04ஏ. 00றூ. 13.6பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2147 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் P 316/94 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

04-330

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

*ஃபார்னிகிராஃப்ட் மெனுஃபெக்ஷரிங் ( பிறைவெற்) லிமிட்டெட்*
*கணக்கு இல.: 0214 1000 0579*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2022.05.26ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2022.07.08ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும்* (Gazette) *2022.07.01ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இரண்டு கோடியே எழுபத்தி இரண்டு இலட்சத்து எண்பத்தி எட்டாயிரத்து நூற்று பத்தொன்பது ரூபா பதினாறு சதம் (ரூபா 27,288,119.16) 2022, ஏப்பிறல் 08 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே தொண்ணூற்றி ஒன்பது இலட்சத்து தொண்ணூற்றி ஆறாயிரத்து முந்நூற்று பதின் நான்கு ரூபா இருபத்து நான்கு சதம் (ரூபா 1,99,96,314.24) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து சைபர் வீதம் (16.50%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட இல.* MMB/SBL/ORU/ *001/ 2017 மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் குத்தகை உரிமைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.05.18 ஆந் திகதி பி.ப.1.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.*

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

இங்கு கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம், வத்தளை, நீர்கொழும்பு வீதி இல. 73/B எனும் வளவுகள் மற்றும் அதன் மீது வைக்கப்பட்டுள்ள மற்றும் வேறு இடத்தில்/இடங்களிலிருந்து இவற்றை அகற்றி கொண்டு செல்லப்படும் அல்லது களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்ட அல்லது ஸ்தாபிக்கப்பட்ட அனைத்து மற்றும் ஒவ்வொரு அசையும் இயந்திரக் கூடங்கள் இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள்

- Vaccum Drier
  SERIAL No. 450/ 17
- CNC Machining Centre R000203
  SERIAL No. A A2/ 004134
- Automatic Wide Belt Sander
  SERIAL Nos. AE/032096, AE/034644, AH/ 119756,
  AB/229960, AB/ 230229, AF/ 006570

வளவுகளுக்கு கொண்டு வரப்படும் மற்றும் அவற்றில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மற்றும் அவற்றிற்கு கொண்டு வரப்படும் மற்றும் கூறப்பட்ட இயந்திராதிகள் மற்றும் உபகரணங்களுக்கு பதில் காலத்திற்கு காலம் கொண்டு வரப்படும் அசையும் இயந்திராதிகள் அல்லது அவற்றின் எந்தவொரு உதிரிப்பாகங்கள் அல்லது ஒரு பகுதி.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

04-343

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஏல விற்பனை அறிவித்தல்*

இல. 606B, சிறி சுமணதிஸ்ஸ மாவத்தை, நவகமுவ, ரணல என்ற முகவரியில் அமைந்துள்ள "சின்தெசி" நிறுவனத்தாரின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைக்கப்பட்ட அதே முகவரியில் அமைந்துள்ள ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2021.04.01ஆந் திகதிய 2222ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2021.03.17ஆந் திகதிய "தினமின" மற்றும் "டெய்லிநியுஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை செலுத்த வேண்டிய வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனத்தையும் கட்டடங்களையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ரீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.06.01ஆந் திகதி காலை 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஈட்டுமுறி இலக்கம் 1648 இல் விபரிக்கப்பட்டுள்ளபடி மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோரளையின் பல்லேபற்று, கடுவெல பிரதேச சபைப் பிரிவிலுள்ள நவகமுவ கிராமத்தில் அமைந்துள்ள ''கொஸ்ஹேன மற்றும் கொஸ்ஹேனவத்த'' என அறியப்படுகின்ற காணிகளும், உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. டீ. டி. டபிள்யு. பீ. பெரேரா தயாரித்த

1978.08.24 ஆந் திகதிய வரைபட இலக்கம் 384 இல் அடையாளப்படுத்தப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு A- வடக்கு : ஒருவலை தொடக்கம் நவகமுவை வரையிலான பிரதேச சபை வீதி, அதே வரைபடத்தின் $A^1$ மற்றும் $A^2$ பகுதிகள், TP 234249 இலுள்ள ஜீ. இலோசிங்கோ மற்றும் ஏனையவர்களது அதே காணியின் ஒரு பகுதி, TP 234249 இலுள்ள ஆர். அந்தோனிஸ் பெர்னாண்டோவின் அதே காணியின் பகுதியும் கொர்னோலிஸ் பெர்னாண்டோவின் காணியும் ; கிழக்கு : TP 183224 இல் யக்தெனியகே யசோமியின் அதே வரைபடத்தின் $A^2$ பகுதியும், TP 153662 இல் மீரியாகொல்லவின் வயல் நிலமும், கொர்னலிஸ் பெர்னாண்டோ, மற்றும் ஏனையவர்களது வயல் நிலமும்; தெற்கு : கொர்னலிஸ் பெர்னாண்டோ, ஏனையவர்களது வயல் நிலமும் கோட்டே விகாரையின் பொறுப்புரிமையாளர்கள் உரிமை கோருகின்ற வயல் நிலமும்; மேற்கு : அதே காணியின் துண்டு $A^1$ மற்றும் கோட்டே விகாரையின் பொறுப்புரிமையாளர்கள் உரிமை கோருகின்ற வயலுடன் ஒன்பது ஏக்கர் இரண்டு றூட் ஆறு தசம் சைபர் பேர்ச்சு (9ஏ. 2றூ. 6.0பே.) விஸ்தீரணத்துடன் வரைபட இல. 384 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அக்காணியிலுள்ள கட்டடம் மற்றும் அதிலுள்ள அனைத்தும் Volume/ Folio G 1669/ 41 இன் கீழ் ஹோமாகம காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிடப்பட்ட காணித்துண்டானது உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். எம். ஜலாலுதீன் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2006.07.13 ஆந் திகதிய 2587 ஆம் இலக்க அண்மைய நில அளவை வரைபடத்தின்படி பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

